சப்-டிரஷரி (காரைக்குடி)

***104 கேள்வி.—திரு. சா. கணேசன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

காரைக்குடியில் ஒரு சப்-டிரஷரியைத் தொடங்க உத்தேசமுண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is a proposal under the consideration of the Government to open a sub-treasury at Karaikudi.

Water-supply for Madras City

*105 *Q.*—Sri M. KALYANASUNDARAM :
Sri P. V. SRIRAMULU :
Sri K. A. MATHIALAGAN : } Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have ordered the investigation of the scheme for the supply of drinking water to the City of Madras from the Cauvery; and

(*b*) if so, the result thereof?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) Yes.

(*b*) The investigation report in the matter has recently been received from the Chief Engineer, Public Works Department (General), and it is under examination.

திரு. கே. ஏ. மதியழகன் : கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்பு ஏழு கிணறு பகுதியில் நடைபெற்ற ஒரு கல்யாணமண்டபத் துவக்க விழாவில், காவேரியில் இருந்து சென்னை நகரத்திற்குத் தண்ணீர் கொண்டுவரும் விஷயத்தில் அதை மிக விரைவில் கவனிப்பதாக கனம் முதல் அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். மூன்று ஆண்டுகள் ஆன பிறகும் இன்னும் அந்த ஆராய்ச்சி இருந்துகொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த நெருக்கடியான பிரச்சனையைத் தீர்ப்பதற்கு கனம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட விசேஷ அக்கறை என்னவென்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

கனம் திரு. கு. காமராஜ் : கனம் அங்கத்தினர் அவர்கள், சென்னை நகரத்திற்கு குடிதண்ணீர் அளிக்கும் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைக் காட்டவேண்டுமென்பதுபோல் கேட்கிறார்கள். அரசாங்கம் செய்யவேண்டிய அத்தனை நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.